**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.327 /2018**

PW1 – தமிழ்செல்வி க/பெ திருஞானம்
நாள் – 30.01.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

13.07.2023 தேதியிட்ட 1–ம் பிரதிவாதி எனது கணவர் மீது கொடுத்த புகாரின் மீது சீர்காழி காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 28.01.2023 தேதியிட்ட மயிலாடுதுறை மாவட்டம் நில அபகரிப்பு பிரிவிலிருந்து எனது கணவருக்கு அனுப்பப்பட்ட சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 11.10.2023 தேதியிட்ட பயிர் காப்பீடு செய்ததற்கான இணையவழி ரசீது தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.